- **வரிமேல் முறையீட்டுக்குழு**

24.10.2016 முதல் தனி அலுவலர் மேல்முறையீட்டுக் குழுவின் உறுப்பினராக உள்ளனர்.

- **ஒப்பந்தக்குழு**

24.10.2016 முதல் தனி அலுவலர் அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராக உள்ளார்.

- **நியமனக்குழு**

24.10.2016 முதல் தனி அலுவலர் அவர்கள் நியமனக்குழு உறுப்பினராக உள்ளார்.

ஆவடி பெருநகராட்சியில் 19.10.2011 அன்று நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களின் பதவி காலம் 24.10.2016 உடன் முடிவடைந்தது.

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படி நகர் மன்ற கூட்டங்கள் நடைபெற்று பொருள்களின் பேரில் முடிவெடுக்கப்பட்டது.

அறிக்கை ஆண்டில் கீழ் கண்டவாறு கூட்டங்கள் நடைபெற்றது

| | |
|---|---|
| சாதாரண கூட்டங்கள் | 13 |
| அவசர கூட்டங்கள் | – |
| தனி கூட்டங்கள் | – |

- **குழுக்கள்**

கீழ்க்கண்ட நிரந்தர குழுக்கள் அறிக்கை ஆண்டில் கூட்டப்பட்டு முடிவு செய்யப்பட்ட பொருள்களும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளது.

| | | கூட்ட எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வரிமேல் முறையீட்டுக்குழு | – | – |
| 2 | ஒப்பந்தக்குழு | – | – |
| 3 | நியமனக்குழு | 3 | 5 |

## 4. ஆணையாளர்கள்.

அறிக்கையாண்டில் 01.04.2017 முதல் 08.08.2017 வரை திரு.ப.மு.நெ.முஜிபுர் ரஹமான், பி.எஸ்சி., அவர்கள் மற்றும் திரு.செ.மதிவாணன், எம்.ஏ., அவர்கள் 08.08.2017 முதல் 31.03.2018 வரை ஆணையராக பணிபுரிந்துள்ளனர்.

## 8. பொறியியல் பிரிவு

1. அறிக்கையாண்டில் 01.04.2017 முதல் 12.02.2018 வரை திரு.வி.சீனிவாசன், பி.ஈ., எம்.பி.ஏ., அவர்கள் நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார். 12.02.2018 முதல் 31.03.2018 வரை திரு கே.வைத்தியலிங்கம் அவர்கள் நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார்

2. திருமதி.C.S.செண்பகவள்ளி அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 அறிக்கையாண்டு முடிய இளநிலை உதவிப்பொறியாளராகப் பணியாற்றியுள்ளார்.

3. திருமதி.பி.நளினி 01.04.2017 முதல் 31.03.2018 வரை உதவிப்பொறியாளராகப் பணியாற்றியுள்ளார்.

**சாலைகள், பாலங்கள், பரிசல்கள் மற்றும் கட்டிடங்கள்**

**அ. சாலைகள்.**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினரால் 19.90 கிலோ மீட்டர் நீளத்திற்கு கீழ்க்கண்ட பாதைகள் பராமரிக்கப்பட்டு வந்தன.

| | | |
|---|---|---|
| 1. | பூவிருந்தமல்லி – ஆவடி சாலை | 3.60கி.மீ |
| 2. | ஆவடி சாலை | 0.70கி.மீ |
| 3. | சென்னை – திருவள்ளூர் சாலை | 11.60கி.மீ |
| 4. | பூவிருந்தமல்லி பட்டாபிராம் சாலை | 2.00கி.மீ |
| 5. | கோயில்பதாகை மெயின் ரோடு | 2.00கி.மீ |
| | மொத்தம் | 19.90கி.மீ |

**நகராட்சியால் பராமரிக்கப்பட்ட சாலைகள்**

| | | |
|---|---|---|
| 1. | சிமெண்ட் கான்கிரிட் சாலை | 166.60 கி.மீ |
| 2. | தார்சாலைகள் | 309.39 கிமீ |
| | | 475.99 .கி.மீ. |

சாலை பராமரிப்பிற்காக அறிக்கை ஆண்டில் ஆறு கேங்க் கூலிகள் பணியாற்றியுள்ளனர். சாலைகளுக்காக அறிக்கை ஆண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.28,40,00,000/– செலவிடப்பட்டது.

ஆவடி நகராட்சி மார்டன் சிட்டி (பாபு நகர்) பகுதி சுடுகாடு மற்றும் இடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி ரூ.65.00 இலட்சத்தின் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2018–19 ஆம் ஆண்டில் பணிகள் முடிக்கப்பட்டு மக்களின் பொது பயன்பாட்டிற்கு கொண்டுவரத்திட்டமிடப்பட்டுள்ளது.

## 50. சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2016–2017 ஆண்டில் ரூ.89.15 லட்சம் மதிப்பில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

### ஆவடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 2–வது வார்டில் அம்பேத்கார் குறுக்கு தெரு 1–வது வார்டில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல். | 3.50 |
| 2 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 10–வது வார்டில் சோழம்பேடு நகராட்சி ஒன்றிய பள்ளிக்கு 100 மீட்டர் சுற்றுசுவர் அமைத்தல். | 3.50 |
| 3 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 13–வது வார்டில் வைஷ்ணவி கோயில் அருகில் பேருந்து நிழற்குடை அமைத்தல். | 4.50 |
| 4 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 17–வது வார்டு துளசிமுத்து தெருவில் ஆழ் துளை கிணறு மற்றும் சிண்டெக்ஸ் தொட்டி அமைத்தல். | 3.40 |
| 5 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 18–வது வார்டில் உள்ள முத்துமாரியம்மன் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 3.00 |
| 6 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 18–வது வார்டில் ஜீவா நகர் சுடுகாட்டு சாலையில் இருந்து செல்வபதி தெரு வரை சிமெண்ட் சாலை மற்றும் கால்வாய் அமைத்தல். | 10.00 |
| 7 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 33–வது வார்டு விவேகானந்தர் தெருவில் ஆழ்துளை கிணறு ,சிண்டெக்ஸ் தொட்டி மற்றும் பைப்லைன் அமைத்தல். | 3.00 |
| 8 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 34–வது வார்டு காமராஜர் சாலை அருகில் பயணியர் நிழற்குடை அமைத்தல். | 3.50 |
| 9 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 39–வது எம்.ஜி.ஆர் நகரில் இருந்து சவுத்பஜார் வரை பைப்லைன் அமைத்தல் | 3.00 |
| 10 | ஆவடி நகராட்சி 25வது வார்டு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மிதிவண்டி நிறுத்த நிழற்கூடாரம் அமைத்தல் | 3.00 |
| 11 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 38–வது வார்டு ஆச்சாரி தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 2.50 |
| 12 | ஆவடி பேருந்து நிலையம் முன்புறம் சாலையில் கால்வாய் அமைத்தல். | 5.00 |

| | | |
|---|---|---|
| 13 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 37–வது வார்டு மாரியம்மன்கோயில் தெரு,தணிகை நகர் மற்றும் வள்ளளார் தெரு ஆகிய 10 இடங்களில் LED விளக்கு அமைத்தல். | 1.95 |
| 14 | ஆவடி பெருநகராட்சியில் 45வது வார்டில் உழைப்பாளர் நகர்4வது தெருவில் பைப்லைன் அமைத்தல். | 2.50 |
| 15 | வார்டு எண் 6ல் நர்மதா தெருவிற்கு மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 5.00 |
| 16 | வார்டு எண் 21ல் சி.டி.எச் சாலை– ஆவடி பேருந்து நிலையம் வரை மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 5.80 |
| 17 | வார்டு எண் 28ல் சுடுகாடு செல்லும் சாலைக்கு ஆர்.சி.சி கல்வெட் அமைத்தல் பணி | 3.50 |
| 18 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 42–வது வார்டு VAO அலுவலகம் அருகில் பயணியர் நிழற்குடை அமைத்தல். | 3.50 |
| 19 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 26வது வார்டில் பைப்லைன் விஸ்தரிப்பு அமைக்கும் பணி | 3.00 |
| 20 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 1–வது வார்டில் வேணுகோபால் தெருவில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல். | 6.00 |
| 21 | ஆவடி பெருநகராட்சியில் உள்ள 9–வது வார்டில் விவேகானந்தா நகர், நூலகம் கட்டிடம் அமைத்தல் | 7.00 |
| 22 | ஆவடி பெருநகராட்சி 36 வது வார்டு லட்சுமி நகர் பைப்லைன் விஸ்தரிப்பு அமைத்தல் பணி | 3.00 |
| | **மொத்தம்** | **89.15** |

## 51. பலன் தரக்கூடிய இனங்கள்

இந்நகராட்சியின் வருவாயை பெருக்கும் நோக்குடன் நகர்புற வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் பின்வரும் கட்டிடங்கள் கட்டப்பட்டு தொடர்ந்து மாத வாடகை அடிப்படையில் வ்ாடகைக்கு விடப்பட்டுள்ளது.

1. காமராசநகர் மெயின் ரோட்டில் 20 கடைகள்
2. திருமலைராசபுரத்தில் கல்யாண மண்டபம் மிகவும் பழமையாக உள்ளதால் அதனை இடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | காமராசநகர் மெயின்ரோடு வணிக வளாக கடைகள் | ரூ.189745/– |
| 2. | ஆவடி நேரு பஜாரில் புதியதாக கட்டப்பட்டுள்ள 40 கடைகளின் மூலம் வருமானம் | ரூ. 729684/– |
| 3. | மீன்கடைகள் – 22 எண்ணிக்கை | ரூ.321000/– |
| 4. | பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் மூன்று அலுவலகம் மற்றும் ஒரு கடை | ரூ.672993/– |
| | **மொத்தம்** | **ரூ.1913422/–** |

## 52. சந்தைகள் மற்றும் இதர குத்தகை இனங்கள்

### அ. சந்தைகள்

இரண்டு தினசரி சந்தைகள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. ஒன்று ஆவடியில் மற்றொன்று தண்டுரையில் உள்ளது. வாரச் சந்தை ஒன்று தண்டுரையில் நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் சந்தைகள் என்ற தலைப்பின் மூலமும் நகராட்சி தினசரி அங்காடிகள் மூலமும் மொத்தம் ரூ.38,00,000/– பெறப்பட்டுள்ளது. இந்நகராட்சி எல்லைக்குள் தனியார் சந்தைகள் ஏதுமில்லை.

### ஆ. வண்டிமேடு

ஆவடியில் ஒன்றும் தண்டுரையில் ஒன்றுமாக இரண்டு வண்டி மேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த இனத்தின் கீழ் வருமானம் சந்தையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

### இ. மீன் மகசூல்

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட ஒன்பது ஏரிகளை மச்ச மகசூல் அனுபவிக்கும் உரிமைக்கு ஏலம் விடப்பட்டதின் மூலம் இவ்வாண்டில் ரூ.34,58,386/– வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

1. பருத்திப்பட்டு ஏரி
2 . மிட்டனமல்லி ஏரி (2 ஏரிகள்)
1. திருமுல்லைவாயல் ஏரி
4. முத்தாபுதுபேட்டை ஏரி
5. திருமுல்லைவாயல் அரபத் ஏரி
6. சேக்காடு ஏரி
7. விளிஞ்சியம்பாக்கம் ஏரி
8. தண்டுரை பெரிய ஏரி
9. கோயில்பதாகை ஏரி

### ஊ. கட்டண கழிப்பிடம்

ஆவடி அண்ணா சிலை புதிய பேருந்து நிலையம் அருகில் நகராட்சியின் கட்டண கழிப்பிடத்திற்கு துறை மூலம் வசூலிக்கப்பட்டதில் ரூ.81,700/– வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

